**மகா அலெக்ஸ்சாண்டர்**

இருபது வயதிலேயே மசிடோனிய மன்னராகினார் அலெக்ஸ்சாண்டர். கி.மு யூலை 356 ல் மன்னர் 2ம் பிலிப்புவுக்கு மகனாக பிறந்தார். சிறு வயதிலேயே புத்தி கூர்மையுடையவராயிருந்த இவர் 13 வது வயதிலே புகழ் பெற்ற தத்துவஞானி அரிஸ்டாட்டிலிடம் கல்வி பயின்றார். அரிஸ்டாட்டிலே உலக நாடுகளை குறித்த அறிவையும் படைவீரர் மக்கள் போன்றோரை எவ்வாறு கையாள வேண்டும் என்ற சூட்சுமங்களை கற்றுக் கொடுத்தார். இதுவே பின்நாளில் பல நாடுகளை ஆக்கிரமித்து இந்தியாவின் பஞ்சாப் வரை படை நடத்திவர உதவியாக இருந்தது. அலெக்ஸ்சாண்டருக்கு 10 வயதாயிருக்கும் போது குதிரை விற்கும் வணிபர் ஒருவர் குதிரை ஒனறை விற்பதற்காக மன்னன் பிலிப்பை பார்க்கவந்தார். அந்தக் குதிரை முரட்டாட்டம் பிடித்ததால் பிலிப் வாங்க மறுத்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த சிறுவன் அலெக்ஸ்சாண்டர் தனக்கு அதை வாங்கி தரும்படியும் தான் அடக்குவதாகவும் கூறினார். அவர் சொன்ன மாதிரி அதை அடக்கியும் காட்டினார். அந்த குதிரைக்கு பூசிஃபாலஸ் என்று பெயர் வைத்தார். இந்த குதிரையிலே அவர் யுத்தத்துக்கு பயணித்தார். அவரது முப்பதாவது வயதில் குதிரை இறந்து போனது. அதன் நினைவாய் ஒரு நகரத்துக்கு பூசிபலா என்ற பெயரை வைத்தார். இவர் கி.மு யூன் 323 ல் தனது 32 வயதில் மரித்து போனார். தானியேல் புத்தகத்தில் கூறப்பட்டபடி மேதிய பெர்சிய சாம்ராஜ்ஜியத்தை வீழ்த்தினார். அலெக்ஸ்சாண்டார் எருசலேம் நகருக்கு போன போது அங்கிருந்த பிரதான ஆசாரியன் தானியேல் புத்தகத்தில் அவனைக் குறித்து சொல்லியிருப்பதை எடுத்துக் கூறியதாக சரித்திரம் கூறுகிறது. அப்போது எருசலேம் நகருக்கு எந்த கெடுதலும் செய்யாமல் போனதாக சொல்லப்படுகிறது.

**கேள்வி:**

உலகம் போற்றக்கூடிய மாவீரன்தான மகா அலெக்ஸ்சாண்டர்?

**பதில்:**

பிள்ளைகளே முதல் நீங்கள் கவனிக்க வேண்டியது தானியேல் சொன்ன தீர்க்கதரிசனம் 200 வருடம் கழித்து நிறைவேறியது. நாளைக்கு என்ன நடக்கும் என்று தெரியாதவர்கள் தான் இந்த மாவீரர்களும் தத்துவஞானிகளும், அறிவாளிகளும். கர்த்தருக்கும் கர்த்தரோடு உறவில் இருக்கும் பரிசுத்தவான்களுக்குமே நாளைக்கு என்ன நடக்கும் என்று தெரியும். சிறுவனாயிருந்த தாவீது ஆட்டை பிடிக்கவந்த சிங்கத்தையும், கரடியையும் கொன்றான். அது தவிர சிறு கல்லால் அடித்தே போரில் அனுபவமுள்ள வயதில் உருவத்தில் பெரியவனான கோலியாத்தை கொன்றான். இவற்றை 1 சாமுவேல் 17ம் அதிகாரத்தில் படிக்கலாம். சிம்சோன் ஒரு கழுதை தாடையை கொண்டு ஆயிரம் பேரைக்

கொன்றான். (நியாதிபதி 15:15) யார் வீரன் என்று பார்க்கும் போது தாவீதும், சிம்சோனும் தலைசிறந்த வீரர்கள். யோசுவாவும் கானானைப் பிடிக்கப் போகும்போது பல ஜாதிகள் எதிர்த்து வந்து போர் புரிந்தனர். அவர்களை எல்லாம் யோசுவா எதிர்த்து வெற்றி கொண்டார். ஒரு தடவை எரிகோ எனும் வலுவான, தகர்க்கவே முடியாது என்ற கோட்டையை இஸ்ரவேல் மக்கள் துதித்து ஆர்ப்பரித்து தகர்த்தனர். பிள்ளைகளே தாவீது, சிம்சோன், யோசுவா ஆகியோர் ஆதிக்கசிந்தையோடு யுத்தம், கொலை செய்யவில்லை. அவர்கள் மக்களின் நலனுக்காக தேவனின் உதவியோடு அவரின் கட்டளைக்கு பணிந்து செய்தனர். சாத்தானுக்கும் வல்லமையுண்டு பிள்ளைகளே. அவனும் மக்களின் அழிவுக்கு இயல்பு வாழ்க்கைக்கு எதிராக செயல்பட மனிதர்களை, அரசுகளை தூண்டிவிடுவான். இன்றைய நாட்களில் யுத்தத்தின் செய்திகளையும் அழிவுகளை பற்றியும் செய்திகளில் படிக்கிறோம் அல்லவா. இவற்றிலிருந்து அப்பாவி ஜனங்களை காப்பாற்ற வேண்டும் என அனுதினமும் ஜெபிப்போமாக.

ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. எபேசியர் 6:12

## ஜெபம்

யேகோவா சாபோத் (சேனைகளின் கர்த்தர்) எங்களோடு இருப்பதற்கு நன்றி. வெள்ளம் போல் சத்துரு வந்தாலும் அதை எதிர்த்து காப்பதற்கு நன்றியப்பா. எங்களை காப்பாற்றியது போல் யுத்தத்தால் பதிக்கப்பட்டிருக்கும் மக்களையும் சிறு பிள்ளைகளையும் பாதுகாருங்கப்பா. ஆமென்